# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ் – மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 20 / 2012**

திருமதி. ஜி. கனகாம்பாள்,
க.பெ (லேட்) எ. கோபால்சாமி,
14எ, பெரிய மாரியம்மன் கோவில் எதிர் சந்து,
முதலியார் தெரு,
கொமாரபாளையம் – 638 183
திருச்செங்கோடு வட்டம்
நாமக்கல் மாவட்டம் . . . . . . .மேல் முறையீட்டாளர்

**எதிர்**

மேற்பார்வை பொறியாளர்,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மேட்டூர் அணை– 636 641 . . . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 20.7.2012**

திருமதி. ஜி. கனகாம்பாள், க/பெ(லேட்) எ.கோபால்சாமி, கொமாரபாளையம் அவர்கள் தனது 2.5.2012 நாளிட்ட மனுவில் தன்னுடைய மின் இணைப்பு எண்.157–008–1365 ல் மின் அளவி பழுதடைந்ததால், இளமின் பொறியாளர்/ தெற்கு குமாரபாளையம் அவர்களால் 24.4.2010 முதல் 18.9.2010 வரையிலான காலங்களுக்கு சராசரி கணக்கீடு செய்து விதிக்கப்பட்ட மின் கட்டணமாகிய ரூ.41,516/– ஐ ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**ஆணை**

1. மேல்முறையீட்டாளர், தனது மேல்முறையீட்டு மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) திருமதி. ஜி. கனகாம்பாள், க/பெ (லேட்) எ.கோபால்சாமி, கொமாரபாளையம் அவர்கள் தனக்கு புதிய மின் இணைப்பு 20.4.2010 அன்று வழங்கப்பட்டது என்றும் அதன் பளு 7.41 கி.வா. என்றும் அதன்மின் இணைப்பு எண்.157–008–1365/TF IIIA (2) என்றும் தெரிவித்துள்ளார்.

(ii) புதிய மின் இணைப்பு வழங்கும்பொழுது இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முறையாக நிறுவப்பட்டு கொண்டிருந்தது. மேலும் உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்கள் அந்த காலகட்டத்தில் தொழிற்சாலைக்குள் வந்து சேரவில்லை. ஆதனால் உற்பத்தி தொடங்கவில்லை. மேலும் இயந்திரங்கள் நிறுவுவதற்காக லைட்டிங் லோட் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. முழுமையாக இயந்திரங்கள் நிறுவிய பிறகு 18/9/2010 முதல் தான் சோதனை ஓட்டமாக தொழிற்சாலையில் இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்தன அதற்கான ஆதாரங்களை 23.2.2012 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இளமின்பொறியாளர், தெற்கு, கொமாரபாளையம் அவர்களுக்கு சமர்ப்பித்த பிறகு அதன் நகலை மேற்பார்வை பொறியாளர் மேட்டூர் மின்பகிர்மான வட்டம், தலைவர், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் அவர்களுக்கு ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அப்போது எந்தவிதமான பரிசீலனைக்காகவும் அவரது கடிதம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(iii) மேற்கண்ட மின்இணைப்பிற்கு லைட்டிங் லோடு மட்டும் தான் பயன்படுத்தியதால் 6/2010 மற்றும் 8/2010 மாதக் கணக்கீடுகளில் Normal என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள்.

(iv) 18.9.2010 முதல் தொழிற்சாலை முறையாக இயங்கி வந்தது. திடீரென மீட்டர் இயங்காததால் 11.10.2010 அன்று மீட்டர் ஓடவில்லை என்றும் உடனடியாக பார்வையிட்டு வேறு மீட்டர் பொருத்த வேண்டும் என்றும் கோரியிருந்ததாக குமாரபாளையம் நிர்வாகம் களஆய்வு செய்து புதிய மின்மீட்டர் 26.10.2010 அன்று பொருத்தப்பட்டது.

(v) மேற்படி புதிய மின்இணைப்பு எண்: 157–008–1365 TF-IIIA(2) நாள் 24.4.2010 அன்று பெற்று இயந்திரங்களை முழுமையான நிலையில் இயக்க முடியாத நிலையிலும் மூலப்பொருட்கள் கிடைக்காத காரணத்தினாலும் பணி நடைபெறவில்லை என்பதுடன் முறையாக பணி தொடங்கிய 18.9.2010 முதல் உள்ள காலங்களுக்கு மட்டும் சராசரி கணக்கீடு செய்து ஏற்கனவே கஷ்டத்தில் இயங்கக்கூடிய அவருக்கு உதவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

(vi) இளமின் பொறியாளர் தெற்கு குமாரபாளையத்தால் 24.4.2010 முதல் 18.9.2010 முடிய உள்ள காலங்களுக்கு மீட்டர் பழுதை காரணம் காட்டி சராசரி கணக்கீடு 4/2010 முதல் 10/2010 வரை உள்ள காலங்களுக்கு ரூபாய்.41,516/– செலுத்தவேண்டி நோட்டீஸ் கொடுத்துள்ளதை மேற்கொண்டு தனது மனுவை பரிசீலனை செய்து 4/2010 முதல் 10/2010 வரை உள்ள காலங்களுக்கு ரூ.41516/– ஐ ரத்து செய்ய ஆவண செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொண்டுள்ளார்.

(vii) மேலும் மீட்டர் பழுது ஏற்பட்ட நாள் முதலான 11.10.2010 முதல் மீட்டர் மாற்றிய தேதியான 26.10.2010 வரை இடைப்பட்ட நாட்களுக்கு மட்டுமே சராசரி கணக்கீடு செய்து, அதற்கான தொகை மட்டுமே செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளார்.

2. மேட்டூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பு 29.2.2012 அன்று வழங்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். அம்மன்றம் வழங்கிய தீர்ப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*(i) மனுதாரர் திருமதி. ஜி. கனகாம்பாள், க/பெ (லேட்) எ. கோபால்சாமி அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில், மேற்படி தாங்கள் தொழிற்சாலைக்கு புதிய மின் இணைப்பு 24.10.2010ல் பெற்று இயந்திரங்கள் நிறுவவும் மூலப்பொருள்கள் பணியாட்கள் நியமிக்கவும் நல்ல நிலையில் இயங்க குறைந்தது நான்கு மாதங்களாகியது அதுவரை அவர் குறைந்த மின் உபயோகமே உபயோகித்து வந்ததாக கூறுவதற்கு எழுத்துபூர்வமான கடிதம் எதுவும் மின் அளவி பழுதான காலத்திற்கு முன்பாக வழங்கவில்லை என்பதால் மின் அளவி பழுதடைந்த காலங்களுக்கு நடைமுறையில் உள்ள TNERC Supply Code clause 11 (4) ன்படி ஒரு புதிய மின் இணைப்பில் இணைக்கப்பட்ட மின் அளவி பழுதடைந்தால் புதிய மீட்டர் மாற்றிய பிறகு பதிவாகும் இரண்டு கணக்கீடு எடுத்து சராசரி நிலுவை வசூல் செய்திட வேண்டும் என்ற மின் உற்பத்தி கழகவிதிமுறைகளின்படி, சராசரி நிலுவைத் தொகை ரூ.41516/– செலுத்தும்படி தாக்கீது வழங்கப்பட்டது சரியானது என்றும் மேற்கூறிய நிலுவைத் தொகையை 3 தவணைகளில் செலுத்தும்படியும் மேற்கூறிய மனுவின் மீது இம்மின் நுகர்வோர் மன்றத்தால் இறுதி முடிவு செய்யப்படுகின்றது.*

*(ii) மேல் முறையீட்டாளருக்கு அந்த தீர்ப்பு ஏற்புடையதாக இல்லாததால் மின் குறை தீர்ப்பாளருக்கு மேல் முறையீடு செய்துள்ளார்.*

3. மேல் முறையீட்டாளரின் மனுவின் நகல் மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளருக்கு **23.5.2012**ல், அனுப்பப்பட்டு உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை என்றால் எதிர்மனுதாக்கல் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர்/ மேட்டூர் மின்பகிர்மான வட்டம் மேட்டூர் அணை அவர்கள் திருமதி கனகாம்பாள் அவர்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.**41516/–** ஐ ரசீது எண்.ERM 157RS15349 dt,15.6.2012 படி செலுத்தியுள்ளதாகவும் மேலும் அவர் தன்னுடைய மேல் முறையீட்டு மனுவை ரத்து செய்யவும் முன் வந்துள்ளதால், தான் எதிர் மனு தாக்கல் செய்யவில்லை என்று தன்னுடைய **23.6.2012** தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் திருமதி கனகாம்பாள் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட உதவி செயற்பொறியாளர் / இ&ப / குமாரபாளையம் அவர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் நகல் ஒன்றையும் தன்னுடைய கடிதத்துடன் இணைத்துள்ளார்.

5. திருமதி. கனகாம்பாள் உதவி செயற்பொறியாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

*“(i) எனது மி.இ.எண் **157–008–1365** TF III (2) தொடர்பான நிலுவைத்தொகை ரூ.**41516/–** செலுத்துவதில் வாரியத்திற்கும் எனக்கும் கருத்துவேறுபாடு உள்ளதின் காரணமாக தமிழ்நாடு மின் ஆம்புட்ஸ்மேன் தீர்ப்பாயத்தில் **2.5.2012** அன்று மேல் முறையீடு செய்துள்ளேன்.*

*(ii) தற்பொழுது மேற்படி மின் இணைப்பின் கணக்கீடுகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில் வாரியத்திற்கும் எனக்கும் உடன்பாடு ஏற்படுத்தலாம் என உள்ளேன். ஆகவே மேற்கண்ட நிலுவைத் தொகையான ரூ.**41516/–** எனது சுய விருப்ப அடிப்படையில் செலுத்த சம்மதிக்கிறேன். இத்தொகைக்கான உரிய ரசீது வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது மேல் முறையீட்டை ரத்து செய்ய மனு செய்துள்ளேன். இத்தொகை சம்பந்தமாக இனிவரும் காலங்களில் வழக்கு எதுவும் என்னால் விளம்பப்படாது என தெரிவித்துக்கொள்கிறேன்”.*

6. திருமதி. ஜி. கனகாம்பாள் அவர்கள் தன்னுடைய சுய விருப்பத்தின் பேரில் பணம் செலுத்தியதாக தெரிவிக்கப்பட்டதால் அவர் மனுவை இரத்து செய்ய விரும்புகிறாரா அல்லது அவர் வழக்காட விரும்புகிறாரா என்று **25.6.2012**இல் கேட்கப்பட்டது. அதற்கு அவரிடம் இருந்து பதில் எதுவும் பெறப்படவில்லை.

7. திருமதி. ஜி. கனகாம்பாள் அவர்கள் உதவிசெயற்பொறியாளருக்கு எழுதிய கடிதத்தில் தன்னுடைய மனுவை இரத்து செய்ய மனு செய்துள்ளதாக அறிவித்துள்ளதாலும் உரிமம்தாரருக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்திவிட்டதாலும் அந்த தொகை சம்பந்தமாக இனிவரும் காலங்களில் வழக்கு எதுவும் செய்யப்போவது இல்லை என்று கூறியுள்ளதாலும் மேற்கூறிய மேல் முறையீட்டு மனு எண்.20/2012 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று மின் குறை தீர்ப்பாளரால் தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திருமதி. ஜி. கனகாம்பாள்,
க.பெ (லேட்) எ. கோபால்சாமி,
14எ, பெரிய மாரியம்மன் கோவில் எதிர் சந்து,
முதலியார் தெரு,
கொமாரபாளையம் – 638 183
திருச்செங்கோடு வட்டம்
<u>நாமக்கல் மாவட்டம்</u>

2) மேற்பார்வை பொறியாளர்,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
<u>மேட்டூர் அணை– 636 641</u>

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

4) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணிணி)
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.